# ஆர்வ வெளிப்பாடு (EOI)

## Sri Lanka Institute of Biotechnology (Private) Limited

SLIBTEC

### குத்தகைதாரர் ஒப்பந்தம் மற்றும் கொள்கை ஆவணங்களுக்காக சட்ட ஆலோசனை நிறுவனத்தின் பெறுகை

ஒப்பந்த இலக்கம்: SLIBTEC/PROC/314/CQS/Consultancy/Procurement of Legal Consultancy Firm for Tenant Agreement and Policy Documents

1. ஹோமாகம, பிட்டிபன, தலகல வீதி, மஹவத்தவில் உள்ள ஸ்ரீ லங்கா இன்ஸ்டிடியுட் ஒப் பயோடெக்னொலஜி (பிரைவட்) லிமிடெட் (SLIBTEC), இலங்கையின் முதல் உயிர்த் தொழில்நுட்பப் புத்தாக்கப் பூங்காவை உருவாக்குவதன் மூலம், நாட்டை பிராந்திய உயிர்த் தொழில்நுட்ப மையமாக நிலைநிறுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. SLIBTEC அரசுக்குச் சொந்தமான நிறுவனம் ஒன்றாக 2020 ஒக்டோபரில் கூட்டிணைக்கப்பட்டதோடு கருவூல செயலாளர் ஏக பங்குதாரர் ஆவார்.

2. உயிர்த் தொழில்நுட்பவியல் துறையில் ஆய்வு, அபிவிருத்தி மற்றும் வர்த்தகமயமாக்கலில் ஈடுபட்டுள்ள அரசுக்குச் சொந்தமான நிறுவனம் ஒன்றான ஸ்ரீ லங்கா இன்ஸ்டிடியுட் ஒப் பயோடெக்னொலஜி (பிரைவட்) லிமிடெட் (SLIBTEC), இரண்டு (02) ஆண்டு காலத்திற்காக குத்தகைதாரர் ஆவணங்கள் தயாரித்தல் மற்றும் கொள்கை ஆவணங்களை மீளாய்வு செய்வதற்கான சட்ட ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்கு பொருத்தமான தகுதி மற்றும் அனுபவம் பெற்ற ஆலோசனை நிறுவனங்களிடம் இருந்து ஆர்வ வெளிப்பாட்டுக்கு (EOI) அழைப்பு விடுக்கிறது.

3. ஆர்வ வெளிப்பாட்டு (EOI) அழைப்பின் நோக்கம், SLIBTEC புத்தாக்கப் பூங்காவின் மேம்பாடு மற்றும் செயல்படுத்தல் தொடர்பாக விரிவான சட்ட ஆலோசனை மற்றும் சட்ட ஆவணங்கள் தயாரிப்பு சேவைகளை வழங்கத் தகுதியும் அனுபவமும் கொண்ட சட்ட ஆலோசனைச் சேவை வழங்குநரை அடையாளம் கண்டு நியமிப்பதாகும். தேர்வுசெய்யப்படும் ஆலோசனை நிறுவனம், வலுவானதும் சட்ட விதிமுறைகளுக்கு இணக்கமானதுமான தரநிலைக் குத்தகை கட்டமைப்பை உருவாக்குவதற்கும், தொடர்புபட்ட அனைத்து தரப்பினரின் பொருந்தக்கூடிய விதிமுறைகள், நிபந்தனைகள், வழிகாட்டுதல்கள், உரிமைகள் மற்றும் கடமைகளை தெளிவாக வரையறுக்கும் வகையில் குத்தகைதாரர் சார்ந்த குத்தகை ஆவணங்களை தயாரிப்பதற்கும் பொறுப்பாகும். இது சட்டரீதியான உறுதித்தன்மை, அபாயத் தணிப்பு மற்றும் பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளுடன் இணக்கத்தன்மை ஆகியவற்றை உறுதி செய்யும் வகையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

4. தகுதியும் போதுமான அனுபவமும் கொண்ட ஆலோசனை நிறுவனத்தின் பணிப்பரப்பு, குறிப்பு விதிமுறைகளில் (TOR) குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்வதாக அமையும். (அனைத்து நடைமுறைகளும் பொருந்தக்கூடிய அரசாங்க / உள்ளூராட்சி மன்ற விதிமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க அமைதல் வேண்டும்.)

5. ஆர்வம் பெற்ற ஆலாசனை நிறுவனம் TOR இல் குறிப்பிடப்பட்ட குறைந்தபட்ச தேவைகளை பூர்த்தி செய்தல் வேண்டும்.

6. ஆலோசனை நிறுவனம், வழங்கப்பட்டுள்ள வடிவத்திற்கு ஏற்ப, ஆலோசனைச் சேவைகளை மேற்கொள்ளத் தேவையான தகுதிகளைப் பணியாளர்கள் கொண்டுள்ளனர் என்பதை உறுதிப்படுத்தும் வகையில், போதுமான ஆதார ஆவணங்களுடன் பின்வரும் தகவல்களை வழங்குதல் வேண்டும். ஆலோசனை நிறுவனத்திற்கான குறிப்பு விதிமுறைகள் (TOR) மற்றும் ஏனைய தொடர்புடைய தகவல்கள், குறிப்புகளுக்காக www.slibtec.gov.lk/procurement/. என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

   a) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் கையொப்பமிடப்பட்ட ஆர்வ வெளிப்பாட்டு கடிதம்.

   b) நிறுவனத்தின் சுயவிபரம்

   c) கடந்த 10 ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட இதனையொத்த பணிகளை வெற்றிகரமாக செயல்படுத்தியமைக்கான ஆதாரங்கள்

   d) வர்த்தகப் பதிவு

   ஆலோசனை நிறுவனம், தேசிய பெறுகை வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஆர்வ முரண் தொடர்பான விதிமுறைகளுக்கு இணங்க செயல்படுதல் வேண்டும்.

7. ஆலோசனை நிறுவனம், தேசிய பெறுகை முகாமையினால் வெளியிடப்பட்ட ஆலோசகர்களைத் தெரிவு செய்தல் மற்றும் பணியில் அமர்த்துதல் தொடர்பான வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளுக்கு அமைவாக, ஆலோசகரின் தகுதிகளை அடிப்படையாகக் கொண்ட தெரிவு முறை (CQS) - நிறுவனம் (ஓகஸ்ட் 2007) என்ற முறையின் கீழ் தெரிவு செய்யப்படும். ஆர்வ வெளிப்பாட்டு (EOI) நடைமுறையின் மூலம் அடையாளம் காணப்பட்ட குறுகிய பட்டியலில் இடம்பெறும் ஆலோசகர்களுக்கு மட்டும், விரிவான பணிக்கான விதிமுறைகள் (TOR) வழங்கப்பட்டு, தொழில்நுட்பம் மற்றும் நிதி முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்க அழைப்பு விடுக்கப்படும். ஆலோசனை நிறுவனத்தின் இறுதித் தெரிவு, TOR மற்றும் தேசிய பெறுகை வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டு அளவுகோல்கள் மற்றும் நடைமுறைகளுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படும்.

8. ஆர்வம் பெற்ற ஆலோசனை நிறுவனம் மு.ப. 9.00 – பி.ப. 4.30 இற்கு இடையே திங்கள் முதல் வெள்ளிவரை தொ.பே. +94 11 3431844 திரு தரிந்து மதுஷங்க (பெறுகைக் முகாமையாளர்) அவர்களின் அவதானத்திற்கு ஹோமாகம, பிட்டிபன, தலகல வீதி, மாஹேன்வத்த, கட்டம் I கட்டிடம் என்ற முகவரியில் ஸ்ரீ லங்கா இன்ஸ்டிடியுட் ஒப் பயோடெக்னொலஜி (பிரைவட்) லிமிடெட் (SLIBTEC), இடமிருந்து மேலதிக விபரங்களை பெறலாம். மேலதிக விபரங்களுக்கு, www.slibtec.gov.lk என்ற இணையதளத்திற்கு பிரவேசிக்கவும்.

9. அனைத்து தேவையான விபரங்கள் உட்பட ஆர்வ வெளிப்பாட்டை 2026 ஜுலை 24 ஆம் திகதி பி.ப. 2.30 தாமதிக்காது கீழ் தரப்பட்ட முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். ஆர்வ வெளிப்பாட்டைக் கொண்ட கடித உறையில் “ஆர்வ வெளிப்பாடு - குத்தகைதாரர் ஒப்பந்தம் மற்றும் கொள்கை ஆவணங்களுக்காக சட்ட ஆலோசனை நிறுவனத்தின் பெறுகை” என்று குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைமை செயற்பாட்டு அதிகாரி**
**Sri Lanka Institute of Biotechnology**
**SLIBTEC கட்டம் I கட்டம்,**
**மாஹேன்வத்த, தலகல வீதி,**
**பிடிபன, ஹோமாகம.**
**தொ.: +94 113431844**
**மின்னஞ்சல்: slibtec@gmail.com**
**இணையதளம்: www.slibtec.gov.lk**

**2026 ஜுலை 10**